**இந்திய அரசு**

**சட்டம் மற்றும் நீதி அமைச்சகம்**

# தேசியத் தலைநகர் தில்லியின் ஆட்சிநிலவரைச் (அனுமதிபெறாத குடியிருப்புகளில் குடியிருந்து வருவோரின் சொத்துரிமைகளை ஏற்பளித்தல்) சட்டம், 2019

**(எண். 45/2019)**

**(2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு )**

# The National Capital Territory of Delhi (Recognition of Property Rights of Residents in Unauthorised Colonies) Act, 2019

**(No. 45 of 2019)**

**(As on 31st October, 2023)**

தமிழாக்கம்:

இந்திய அரசுக்காக

தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம்

சென்னை

தமிழ்நாடு அரசு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது

2023

# தேசியத் தலைநகர் தில்லியின் ஆட்சிநிலவரைச் (அனுமதிபெறாத குடியிருப்புகளில் குடியிருந்து வருவோரின் சொத்துரிமைகளை ஏற்பளித்தல்) சட்டம், 2019

(எண் 45/2019)

# The National Capital Territory of Delhi (Recognition of Property Rights of Residents in Unauthorised Colonies) Act, 2019

**(No. 45 of 2019)**

# PREFACE

This edition of the National Capital Territory of Delhi (Recognition of Property Rights of Residents in Unauthorised Colonies) Act, 2019 as on 31st October 2023, containing the Authoritative Texts of that Act in Tamil and the same was published in the Gazette of the India, Extraordinary, Part XV, Section 1, Vol. I, dated 17th July, 2023 on Pages from 311 to 317

The Authoritative Texts in Tamil was published under the authority of the President under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973) and on such publication, it become the authoritative texts of the Act in Tamil.

New Delhi, *(Signed)……*
17th July, 2023. *Secretary to Government of India.*

# முன்னுரை

2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறுள்ள தேசியத் தலைநகர் தில்லியின் ஆட்சிநிலவரைச் (அனுமதிபெறாத குடியிருப்புகளில் குடியிருந்து வருவோரின் சொத்துரிமைகளை ஏற்பளித்தல்) சட்டம், 2019 (எண் 45/2019) இன் இந்தப் பதிப்பு அச்சட்டத்தின் அதிகாரவுரிமைப்படியான தமிழ் வாசகத்தைக் கொண்டுள்ளது, இது 2023, ஜூலை 17 ஆம் தேதியிட்ட இந்திய அரசிதழின் சிறப்பிதழ், பகுதி XV, பிரிவு 1, தொகுதி I இன் 311 முதல் 317 வரையிலான பக்கங்களில் வெளியிடப்பட்டது.

இந்த அதிகாரவுரிமைப்படியான வாசகமாகிய தமிழ் மொழிபெயர்ப்பு, அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 இன் (50/1973) பிரிவு 2 இன் கூறு (அ) வின்படி குடியரசுத்தலைவருக்குள்ள அதிகாரத்தின்படி வெளியிடப்பட்டது, அவ்வாறு வெளியிடப்பட்டதன் பேரில், இது தமிழில் அச்சட்டத்தின் அதிகாரவுரிமைப்படியான வாசகம் ஆயிற்று.

புது தில்லி, (ஒப்பம்)......
17, ஜூலை 2023. இந்திய அரசு செயலாளர்.

# THE NATIONAL CAPITAL TERRITORY OF DELHI (RECOGNITION OF PROPERTY RIGHTS OF RESIDENTS IN UNAUTHORISED COLONIES) ACT, 2019

**(No . 45/ 2019)**

## CONTENTS

**Sections** **Pages**


| Sections | | Pages |
|---|---|---|
| 1. | Short title and extent. | 3 |
| 2. | Definitions. | 3 |
| 3. | Recognition of property rights. | 3 |

# தேசியத் தலைநகர் தில்லியின் ஆட்சிநிலவரைச் (அனுமதிபெறாத குடியிருப்புகளில் குடியிருந்து வருவோரின் சொத்துரிமைகளை ஏற்பளித்தல்) சட்டம், 2019

(எண் 45/2019)

**பொருளடக்கம்**


| பிரிவுகள் | | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | குறுந்தலைப்பு மற்றும் அளாவுகை. | 3 |
| 2. | பொருள் வரையறைகள். | 3 |
| 3. | சொத்துரிமைகளை ஏற்பளித்தல். | 3 |

# THE NATIONAL CAPITAL TERRITORY OF DELHI (RECOGNITION OF PROPERTY RIGHTS OF RESIDENTS IN UNAUTHORISED COLONIES) ACT, 2019

**(No . 45 of 2019)**

[11th December, 2019.]

An Act to provide special provisions for the National Capital Territory of Delhi for recognising the property rights of resident in unauthorised colonies by securing the rights of ownership or transfer or mortgage in favour of the residents of such colonies who are possessing properties on the basis of Power of Attorney, Agreement to Sale, Will, possession letter or any other documents including documents evidencing payment of consideration and for the matters connected therewith or incidental thereto.

WHEREAS there has been phenomenal increase in the population of the National Capital Territory of Delhi in the last few decades owing to migration and other factors but development of planned housing colonies have not kept pace with the requirements of a burgeoning population resulting in the increase of unauthorised colonies;

AND WHEREAS number of unauthorised colonies have been identified in the National Capital Territory of Delhi on the basis of applications made by the Residents Welfare Associations for regularisation in pursuance to notification number S.O. 683(E), dated the 24th March, 2008 of the Delhi Development Authority, published in the Gazette of India, Extraordinary, Part II, Section 3, Sub-section (ii), dated the 24th March, 2008;

AND WHEREAS the properties in these colonies are not being registered by registering authority and thereby the residents do not have any title documents in respect of such properties and the Banks and financial institutions do not extend any credit facilities in respect of said properties;

# தேசியத் தலைநகர் தில்லியின் ஆட்சிநிலவரைச் (அனுமதிபெறாத குடியிருப்புகளில் குடியிருந்து வருவோரின் சொத்துரிமைகளை ஏற்பளித்தல்) சட்டம், 2019

## (எண் 45/2019)

[2019, டிசம்பர் 11]

அனுமதிபெறாத குடியிருப்புகளில் பகர அதிகாரஆவணம், விற்பனை உடன்பாடு, விருப்புறுதிஆவணம், உடைமை ஆவணம் அல்லது மறுபயன் கொடுத்ததன் ஆவணங்கள் உள்ளடங்கலான பிற ஆவணங்கள் எவற்றின் அடிப்படையிலும் சொத்துக்களை உடைமையில் வைத்திருக்கும் அத்தகைய குடியிருப்புகளில் குடியிருந்து வருவோருக்கு உடைமையுரிமை அல்லது உரிமைமாற்றம் அல்லது அடைமான உரிமைகளை எய்திடச் செய்வதன் மூலமாக ஆங்குக்குடியிருந்து வருபவருக்குள்ள சொத்துரிமைகளை ஏற்பளிப்பதற்காக தில்லி தேசிய தலைநகர ஆட்சி நிலவரைக்காகச் சிறப்பு வகையங்களையும் மற்றும் அதனுடன் தொடர்புடைய அல்லது அதற்குச் சார்வுறுவான பொருட்பாடுகளுக்கும் வகைசெய்வதற்கானதொரு சட்டம்.

குடிபெயர்தல் மற்றும் பிற காரணிகளின் காரணமாக கடந்த சில பத்தாண்டுகளில் தேசியத் தலைநகர் தில்லி ஆட்சிநிலவரையின் மக்கள்தொகையில் வியக்கத்தக்க பெருக்கம் இருந்துவருகிறது; ஆனால் திட்டமிடப்பட்ட வீட்டுவசதி குடியிருப்புகளின் வளர்ச்சியானது, அனுமதிபெறாத குடியிருப்புகளின் பெருக்கத்தின் விளைவாக மக்கள்தொகையின் தேவைகளின் வேகத்திற்கு மேம்படாது இருப்பதாலும்;

மேலும், 2008, மார்ச் 24 ஆம் , தேதியிடப்பட்ட சிறப்பு, இந்திய அரசிதழ், பகுதி II, பிரிவு 3, உட்பிரிவு (i) இல் வெளியிடப்பட்ட தில்லி மேம்பாட்டு அதிகாரஅமைப்பின் 2008, மார்ச் 24 ஆம் தேதியிடப்பட்ட அறிவிக்கை எண் எஸ்.ஒ. 683 (E) ஐப் பின்பற்றி முறைப்படுத்தலுக்காக குடியிருப்போர் நலச் சங்கத்தால் செய்யப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில் தேசியத் தலைநகர் தில்லியின் ஆட்சிநிலவரையில் குறிப்பிட்ட எண்ணிக்கையில் அனுமதிபெறாத குடியிருப்புகள் கண்டறியப்பட்டிருப்பதாலும்;

மேலும் இந்தக் குடியிருப்புகளிலுள்ள சொத்துக்களைப் பதிவு செய்யும் அதிகாரஅமைப்பினால் பதிவு செய்யப்படாமலும் அதன் விளைவாக, குடியிருப்பவர்கள் அத்தகைய சொத்துக்கள் பொறுத்து உரிமைமூல ஆவணங்கள் எவையும் கொண்டிருக்காமல், வங்கிகளும் நிதி நிறுவனங்களும் மேற்சொன்ன சொத்துக்கள் பொறுத்து கடன் வசதிகள் எவையும் வழங்காமலிருப்பதாலும்;

AND WHEREAS the ownership of the properties in unauthorised colonies have been transferred several times through registered or un-registered or notarised Power of Attorney, Agreement to Sale, Will, possession letter and other documents including documents evidencing payment of consideration and stamp duty on these multiple transactions have neither assessed nor been paid;

AND WHEREAS the stamp duty on the conveyance deed or authorisation slip, as the case may be, is leviable as per minimum rates (circle rates) specified in the notification of the Government of the National Capital Territory of Delhi published vide number F.1(953) Regn. Br./ Div. Com/HQ/2014, dated the 22nd September, 2014 or the sale consideration mentioned in the conveyance deed or authorisation slip, as the case may be, whichever is higher;

AND WHEREAS the Supreme Court in the case of Suraj Lamp & Industries (P) Ltd. Vs. State of Haryana & others vide its judgment dated the 11th October, 2011 had held that sale agreement/general Power of Attorney or Will transactions are not “transfers” or “sales” and that such transactions cannot be treated as completed transfers or conveyances and they can continue to be treated as existing agreement of sale;

AND WHEREAS keeping in view the socio-economic conditions of the residents of these unauthorised colonies and ground realities, it is desirable to recognise and confer rights of ownership or transfer or mortgage to the residents of such colonies on the basis of Power of Attorney, Agreement to Sale, Will, possession letter and other documents including documents evidencing payment of consideration and to facilitate development or re-development that may improve existing infrastructure, civic and social amenities which may lead to better quality of life;

AND WHEREAS it is expedient to have a law to recognise and confer rights of ownership or transfer or mortgage to the residents of unauthorised colonies as one time special measure.

மேலும், அனுமதிபெறாத குடியிருப்புகளிலுள்ள சொத்துக்களின் உடைமையுரிமை, பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத அல்லது சான்றிடப்பட்ட பகர அதிகாரஆவணம், விற்பனை உடன்பாடு, விருப்புறுதி ஆவணம், உடைமை ஆவணம் மற்றும் மறுபயன் கொடுத்ததன் ஆவணங்கள் உள்ளடங்கலான பிற ஆவணங்கள் மூலமாக பல முறை உரிமைமாற்றம் செய்யப்பட்டு இந்தப் பற்பல நடவடிக்கைகள் மீது முத்திரைத் தீர்வை விதிக்கப்படாமலோ செலுத்தப்படாமலோ இருப்பதாலும்;

மேலும், நேர்வுக்கேற்ப, உடைமை மாற்ற ஆவணத்தின் மீது அல்லது அதிகாரமளிப்புச் சீட்டின் மீது தேசியத் தலைநகர தில்லியின் ஆட்சிநிலவரை அரசின் 2014, செப்டம்பர், 22 ஆம் தேதியிடப்பட்டு எண் F.1(953) Regn.Br./Div.Com/HQ/2014 வாயிலாக வெளியிடப்பட்ட அறிவிக்கையில் குறித்துரைக்கப்பட்ட கீழ்வரை வீதங்களின்படி (வட்டச்சுற்று வீதங்களில்) முத்திரைத் தீர்வை அல்லது நேர்வுக்கேற்ப, உடைமை மாற்ற ஆவணத்தில் அல்லது அதிகாரமளிப்புச்சீட்டில் குறிப்பிடப்பட்ட விற்பனை மறுபயன், இவற்றில் எது அதிகமோ அது செலுத்தத்தக்கதாக இருப்பதாலும்;

மேலும், உச்ச நீதிமன்றம், சூரஜ் லேம்ப் மற்றும் தொழிற்சாலைகள் (பி) லிமிட்டெட் எதிர் அரியானா மாநிலம் மற்றும் பிறர் என்ற வழக்கில் 2011, அக்டோபர் 11 ஆம், தேதியிடப்பட்ட அதன் தீர்ப்புரையின் வாயிலாக விற்பனை உடன்பாடு, பொதுப் பகர அதிகார ஆவணம் அல்லது விருப்புறுதி பரிமாற்றங்கள் ‘‘உரிமை மாற்றங்களோ’’ அல்லது ‘‘விற்பனைகளோ’’ அல்ல என்றும் அத்தகைய பரிமாற்றங்கள் முழுமையடைந்த உரிமை மாற்றங்களாகவோ அல்லது உடைமை மாற்றங்களாகவோ கருதப்படமுடியாது என்றும் அவை இருந்துவரும் விற்பனைக்கான உடன்பாடாகவே தொடர்ந்து கருதப்படமுடியும் என்றும் முடிவு செய்திருப்பதாலும்;

மேலும், இந்த அனுமதிபெறாத குடியிருப்புகளில் குடியிருந்து வருவோரின் சமூகப்பொருளாதார நிலைமைகளையும் உண்மைக் கள நிலவரங்களையும் கருத்தில் கொண்டு, பகர அதிகாரஆவணம், விற்பனைக்கான உடன்பாடு, விருப்புறுதி ஆவணம், உடைமை ஆவணம் மற்றும் மறுபயன் கொடுத்ததன் ஆவணங்கள் உள்ளடங்கலான பிற ஆவணங்களின் அடிப்படையில், அத்தகைய குடியிருப்புகளில் குடியிருந்து வருவோருக்கு உடைமையுரிமை அல்லது உரிமைமாற்றம் அல்லது அடமான உரிமைகளை ஏற்பளிப்பதும் வழங்குவதும்; மற்றும் செம்மையான வாழ்க்கைத் தரத்திற்கு இட்டுச்செல்வதற்குமான இருந்துவரும் உள்கட்டமைப்பு, குடியியல் மற்றும் சமூக வசதிகளை மேம்படுத்தும் வளர்ச்சியை அல்லது மறு வளர்ச்சியை ஊக்குவிப்பதும் விரும்பத்தக்கதாக இருப்பதாலும்;

மற்றும் ஒற்றைமுறை சிறப்பு நடவடிக்கையாக அனுமதிபெறாத குடியிருப்புகளில் குடியிருந்துவருவோருக்கு உடைமையுரிமை அல்லது உரிமைமாற்றம் அல்லது அடமான உரிமைகளை ஏற்பளிப்பதற்கும், வழங்குவதற்கும் சட்டம் ஒன்றைக் கொண்டிருப்பது உகந்ததாக இருப்பதாலும்.

BE it enacted by Parliament in the Seventieth Year of the Republic of India as follows:—

Short title and extent.

1. (1) This Act may be called the National Capital Territory of Delhi (Recognition of Property Rights of Residents in Unauthorised Colonies) Act, 2019.

(2) It extends to the National Capital Territory of Delhi

Definitions.

2. In this Act, unless the context otherwise requires,—

(a) "resident" means a person having physical possession of property on the basis of a registered sale deed or latest Power of Attorney, Agreement to Sale, Will, possession letter and other documents including documents evidencing payment of consideration in respect of a property in unauthorised colonies and includes their legal heirs but does not include tenant, licensee or permissive user;

(b) "unauthorised colony" means a colony or development comprising of a contiguous area, where no permission has been obtained for approval of layout plan or building plans and has been identified for regularisation of such colony in pursuance to the notification number S.O. 683(E), dated the 24th March, 2008 of the Delhi Development Authority, published in the Gazette of India, Extraordinary, Part II, Section 3, Sub-section (ii), dated the 24th March, 2008.

Recognition of property rights.

3. (1) Notwithstanding anything contained in the Indian Stamp Act, 1899 and the Registration Act, 1908 as applicable to the National Capital Territory of Delhi or any rules or regulations or bye-laws made there under and the judgment of the Supreme Court in the case of Suraj Lamp & Industries (P) Ltd. Vs. State of Haryana & others, dated the 11th October, 2011, the Central Government may, by notification in the Official Gazette, regularise the transactions of immovable properties based on the latest Power of Attorney, Agreement to Sale, Will, possession letter and other documents including documents evidencing payment of consideration for conferring or recognising right of ownership or transfer or mortgage in regard to an immovable property in favour of a resident of an unauthorised colony.

2/1899.

16/1908.

இந்தியக் குடியரசின் எழுபதாம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக–

1. (1) இந்தச் சட்டம், தேசியத் தலைநகர் தில்லியின் ஆட்சிநிலவரைச் (அனுமதிபெறாத குடியிருப்புகளில் குடியிருந்து வருவோரின் சொத்துரிமைகளை ஏற்பளித்தல்) சட்டம், 2019 என்று வழங்கப்பெறும். குறுந்தலைப்பு மற்றும் அளாவுகை.

(2) இது, தேசியத் தலைநகர் தில்லியின் ஆட்சிநிலவரைக்குள் அளாவி நிற்கும்.

2. இந்தச் சட்டத்தில், தறுவாயின் தேவை வேறானாலன்றி,– பொருள் வரையறைகள்.

(அ) ''குடியிருப்போர்'' என்பது, அனுமதிபெறாத குடியிருப்புகளில் உள்ள சொத்து ஒன்றைப் பொறுத்துப் பதிவுசெய்யப்பட்ட விற்பனைஆவணம் அல்லது அண்மைய பகர அதிகாரஆவணம், விற்பனைக்கான உடன்பாடு, விருப்புறுதிஆவணம், உடைமை ஆவணம் மற்றும் மறுபயன் கொடுத்ததன் ஆவணங்கள் உள்ளடங்கலான பிற ஆவணங்களின் அடிப்படையில் சொத்தினைக் கையுடைமையில் கொண்டிருக்கும் ஒருவர் என்று பொருள்படும்; மற்றும் அவர்களின் சட்டப்படியான வாரிசுகளை உள்ளடக்கும் ஆனால் குத்தகைதாரர், உரிமம் பெற்றவர் அல்லது இசைவுபெற்ற பயனாளியை உள்ளடக்காது;

(ஆ) ''அனுமதிபெறாத குடியிருப்பு'' என்பது, மனைத்திட்ட அமைப்போ, அல்லது கட்டடத் திட்டங்களோ ஒப்பேற்பு செய்வதற்கான அனுமதிபெறாமல் இருக்கிற அவற்றை ஒட்டியுள்ள பகுதி ஒன்றில் அடங்கியிருப்பதும் 2008, மார்ச் 24 ஆம் தேதியிடப்பட்ட இந்திய சிறப்பு அரசிதழில், பகுதி II, பிரிவு 3, உட்பிரிவு (ii) வெளியிடப்பட்ட தில்லி மேம்பாட்டு அதிகாரஅமைப்பின் 2008, மார்ச் 24 ஆம் தேதியிடப்பட்ட அறிவிக்கை எண். எஸ்.ஓ.683 (E) ஐப் பின்பற்றி அத்தகைய குடியிருப்பை முறைப்படுத்து வதற்காகக் கண்டறியப்பட்டிருப்பதுமான ஒரு குடியிருப்பு அல்லது மேம்பாடு என்று பொருள்படும்.

3. (1) தேசியத் தலைநகர் தில்லியின் ஆட்சிநிலவரைக்குப் சொத்துரிமைகளை ஏற்பளித்தல்.
2/1899. பொருந்தத்தக்கவாறான, இந்திய முத்திரைத்தாள் சட்டம், 1899 மற்றும் பதிவுச் சட்டம், 1908 ஆகியவற்றில் அல்லது அவற்றின்படி செய்யப்பட்ட
16/1908. விதிகள், ஒழுங்குறுத்தும் விதிகள் அல்லது துணைவிதிகளில் மற்றும் சூரஜ் லேம்ப் மற்றும் தொழிற்சாலைகள் (பி) லிட் எதிர் அரியானா மாநிலம் மற்றும் பிறர் என்ற வழக்கில் 2011, அக்டோபர் 11 ஆம், தேதியிடப்பட்ட உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புரையில் அடங்கிய எது எவ்வாறிருப்பினும், மைய அரசு, அதிகாரமுறை அரசிதழில், அறிவிக்கை வாயிலாக, அனுமதிபெறாத குடியிருப்பு ஒன்றில் குடியிருந்து வரும் ஒருவர் சார்பாக அசையாச் சொத்து ஒன்றைப் பொறுத்து உடைமையுரிமை, உரிமை மாற்றம் அல்லது அடமான உரிமையை வழங்குவதற்காக அல்லது ஏற்பளிப்பதற்காக அண்மைய பகர அதிகார ஆவணம், விற்பனைக்கான உடன்பாடு, விருப்புறுதி ஆவணம், உடைமை ஆவணம் மற்றும் மறுபயன் கொடுத்ததன் ஆவணங்கள் உள்ளடங்கலான பிற ஆவணங்களின் அடிப்படையில் அசையாச் சொத்துக்களின் பரிமாற்றங்களை முறைப்படுத்தலாம்.

(2) The Central Government may, by notification published in the Official Gazette, fix charges on payment of which transactions of immovable properties based on the latest Power of Attorney, Agreement to Sale, Will, possession letter and other documents including documents evidencing payment of consideration for conferring or recognising right of ownership or transfer or mortgage in regard to an immovable property in favour of a resident of an unauthorised colony through a conveyance deed or authorisation slip, as the case may be.

(3) Notwithstanding anything contained in section 27 of the Indian Stamp Act, 1899 the stamp duty and registration charges shall be payable on the amount mentioned in the conveyance deed or authorisation slip, as the case may be. 2/1899.

(4) Any resident of an unauthorised colony having registered or un-registered or notarised Power of Attorney, Agreement to Sale, Will, possession letter and other documents including documents evidencing payment of consideration shall be eligible for right of ownership or transfer or mortgage through a conveyance deed or authorisation slip, as the case may be, on payment of charges referred to in sub-section (2).

(5) No stamp duty and registration charges shall be payable on any previous sale transactions made prior to any transaction referred to in sub-section (4).

(6) The tenants, licensees or permissive users shall not be considered for conferring or recognising any property rights under this Act.

(2) மைய அரசு, அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்படும் அறிவிக்கை வாயிலாக, நேர்வுக்கேற்ப, உடைமைமாற்றம் அல்லது அதிகாரமளிப்புச் சீட்டு ஒன்றின் மூலமாக அனுமதிபெறாத குடியிருப்பு ஒன்றில் குடியிருந்துவரும் ஒருவர் சார்பாக அசையாச் சொத்து ஒன்றைப் பொறுத்து உடைமையுரிமை, உரிமைமாற்றம் அல்லது அடைமான உரிமை வழங்குவதற்காக அல்லது ஏற்பளிப்பதற்காக அண்மைய பகர அதிகார ஆவணம், விற்பனைக்கான உடன்பாடு, விருப்புறுதி ஆவணம், உடைமை ஆவணம் மற்றும் மறுபயன் கொடுத்ததன் ஆவணங்கள் உள்ளடங்கலான பிற ஆவணங்களின் அடிப்படையில் அசையாச் சொத்துக்களின் பரிமாற்றங்களுக்கான கட்டணச் செலுத்தத்தினை நிருணயிக்கலாம்.

2/1899. (3) இந்திய முத்திரைத்தாள் சட்டம், 1899 இன் 27 ஆம் பிரிவில் அடங்கிய எது எவ்வாறிருப்பினும், முத்திரைத் தீர்வையும் பதிவுக் கட்டணமும், நேர்வுக்கேற்ப, உடைமை மாற்ற ஆவணத்திலோ அல்லது அதிகாரமளிப்புச் சீட்டிலோ குறிப்பிடப்பட்ட தொகை மீது செலுத்தப்படத்தக்கனவாகும்.

(4) பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத அல்லது சான்றிடப்பட்ட பகர அதிகார ஆவணம், விற்பனைக்கான உடன்பாடு, விருப்புறுதிஆவணம், உடைமை ஆவணம் மற்றும் மறுபயன் கொடுத்ததன் ஆவணங்கள் உள்ளடங்கலான பிற ஆவணங்களைக் கொண்டிருக்கும் அனுமதிபெறாத குடியிருப்பு ஒன்றில் குடியிருப்பவர் எவரும் (2) ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்ட கட்டணங்களைச் செலுத்தவதன் பேரில், நேர்வுக்கேற்ப, உடைமை மாற்ற ஆவணம் அல்லது அதிகாரமளிப்புச் சீட்டு ஒன்றின் மூலமாக உடைமையுரிமை அல்லது உரிமைமாற்றம் அல்லது அடமான உரிமைக்குத் தகுமையுடையவர் ஆவார்.

(5). (4) ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்ட நடவடிக்கை எதற்கும் முன்னர் செய்யப்பட்ட முந்திய விற்பனை நடவடிக்கைகள் எவற்றின் மீதும் முத்திரைத் தீர்வையும் பதிவுக் கட்டணங்களும் செலுத்தப்படுதல் ஆகாது.

(6) குத்தகைதாரர்கள், உரிமம் பெற்றவர்கள் அல்லது அனுமதிபெற்ற பயனாளிகள், இந்தச் சட்டத்தின்படி சொத்துரிமைகள் எவற்றையும் வழங்குவதற்காகவோ அல்லது ஏற்பளிப்பு செய்வதற்காகவோ கருத்தில் கொள்ளப்படுதல் ஆகாது.